அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை :  20/2011(I)

எனது இலக்கம் : EST-7/06/DIS/1000
பொது  நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2025.01.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண  பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>ஒழுக்காற்று  விசாரணைக்கு தேவையான புகைப்பட பிரதிகளை வழங்கும் போது அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள்</u>**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட  2011.10.25 தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 20/2011 தொடர்பில் உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. தாபனக் கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII  இன் உபபிரிவு 14:11 இன் ஏற்பாடுகளின்படி குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரின் அல்லது அவரின் எதிர்காப்பு அலுவலரின் கோரிக்கையின் மீது ஒழுக்காற்று விசாரணைக்கு உரிய கூற்றுக்கள், கடித ஆவணங்களின் புகைப்பட பிரதிகளை வழங்கும் போது, மேற்படி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் கீழ்வரும் முறையில் திருத்தம் செய்யப்படுகின்றன.

| கடதாசியின் அளவு | பிரதிகளுக்குரிய கட்டணங்கள் | |
|---|---|---|
| | தனி பக்கம் (ரூ.) | இரு பக்கம் (ரூ.) |
| A4 | 8.00 | 11.00 |
| B4 | 12.00 | 14.00 |
| Legal | 10.00 | 13.00 |

03. இவ் திருத்தம் 2025.02.01 ஆம் தினத்திலிருந்து செயற்படும்.

04. பொதுத் திறைச்சேரியின் உடன்பாட்டுடன் இவ் சுற்றறிக்கை ளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக,  மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி : 011-2697233
தொலைநகல் : 011-269215
மின்னஞ்சல் : ade-vii@pubad.gov.lk